REGD. NO. M. 6311 [illegible] ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

அமராவதி தேக்கத் தண்ணீர்: சிறு சிறு கால்வாய்கள் மூலம் குடியானவர் நிலங்களுக்குக் கொண்டு செல்லத் திட்டம்

சென்னை, செப். 21—

அமராவதி தேக்கத் தண்ணீரை குடியானவர்களுடைய நிலங்களுக்குக் கொண்டு செல்ல சிறுசிறு கால்வாய்களை அரசாங்கத்தின் செலவில் வெட்டுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரூ. 2·97 கோடி செலவில் 39 மைல் நீளக் கால்வாய்களை உடையது அமராவதித் திட்டம். கோவை மாவட்டத்தில் சுமார் 11823 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின் மூலம் பாசனத்திற்குக் கொண்டு வரப்படும்.

மலர் 5] சென்னை: புரட்டாசி 5உ சனி (21—9—57) ★ ★ வெளியீடு: புரட்டாசி 6உ ஞாயிறு (22—9—57) [இதழ் 85

'நாம் உரிமையை இழந்து வாழ முடியாது'

'அவசர அவசரமாக இந்தியை திணிப்பது ஏன்?'

'டில்லியின் ஆதிக்கநோக்கம் தவிர வேறு காரணம் ஏது?'

'கட்சி வேறுபாடுகளை மறந்து இந்தித் திணிப்பை முறியடிக்க வாரீர்'

திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் சி. வி. எம். அண்ணாமலை துவக்கவுரை

திருவண்ணாமலை, செப். 21—

"இன்றைய இந்திய அரசியலார் அவசர அவசரமாக இந்தி கற்க வேண்டுமென்று வலிந்துரைத்துக் கூறுவதற்குக் காரணம், நமது நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை மூடி மறைப்பதற்கும், 'ஏக இந்தியா' என்ற அடிப்படையில் நம்மை அடக்கி ஒடுக்கிச் சுரண்டி வாழ்வதற்காகவும்தான் என்பதை தென்னாட்டில் உள்ள அரசியல் கருத்து மாறுபாடுடைய தலைவர்களுக்கும் தோழர்களுக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

"போதுவாகத் தென்னாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களாகிய நாம், எக்காரணத்தைக் கொண்டும் இனிமேல் 'ஏக இந்தியா' என்ற அடிப்படையில் நமது உரிமையை இழந்து, வடநாட்டு மத்திய ஆட்சியாளருடன் ஒன்றி வாழப்போவதில்லை—வாழவும் முடியாது! இது உறுதி—உறுதி—உறுதி!!"

—இவ்வாறு, இன்று திருவண்ணாமலையில், சாமி அரங்கில் நடைபெறும் வடாற்காடு மாவட்ட தி. மு. க. இந்தி எதிர்ப்பு மாநாட்டில் திறப்புரை ஆற்றுகையில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

"இந்தி எதிர்ப்பு மாநாடு என்ற பெயரில் கடந்த பத்தொன்பதாண்டுகளுக்கு முன்னர் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டின்போது நம்முடைய கோரிக்கைகளும், கண்டனங்களும் வேறு வேறு தன்மை படைத்திருந்தன. இன்றைய நம்முடைய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நமது கண்டனமும் கோரிக்கைகளும் வேறு வேறு ஜீவாதார உரிமைக் கோரிக்கைகள்—வேறு தன்மைகள் வாய்ந்தவை என்பதை நம் மாநில அரசியலாரும் மத்திய அரசியலாரும் உணர்தல் வேண்டுமென விழைகின்றேன்.

"1938-ம் ஆண்டில் நமது மாநில ஆட்சியின் முதலமைச்சராயிருந்த திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று படிவங்களிலும் மாணவர்கள் இந்தி கட்டாயமாகப் பயிலவேண்டுமென்ற சட்டத்தைக் கொணர்ந்தார்; ஆணவத்தோடு, நாட்டு மக்களின் வேண்டுகோளை மதியாது, 'கட்டாய இந்தியைக் கண்டிக்கின்றவர்கள் அறிவிலிகள்' என்று பேசினார்; அவருக்கு அன்று நாம் நல்லதொரு பாடத்தை கற்பித்தோம் என்பதை நாட்டு மக்கள் நன்கறிவர்.

"இந்தியத் துணைக்கண்டத்திலேயே காங்கிரசு ஆட்சியாளர்கள் முதல் முதலாவதாக இந்தியைக் கட்டாயமாகப் பயில வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது நம் சென்னை மாநிலத்தில்தான்; மற்ற வட மாநிலங்களில் குறிப்பாக இந்தி மொழியைத் தாய் மொழியாக உடைய பிறமாநிலங்களிலேயே கூட இந்திக் கல்விபற்றிப் பேச்சு இல்லாதிருந்தபோது அன்றைய நம் மாநில முதலமைச்சராயிருந்த ஆச்சாரியார் அவர்கள், நம் மாநிலத்துப் பள்ளி மாணவர்களின் எண்ணத்திற்கு மாறாகவும், தமிழ் அறிஞர்களின் வேண்டுகோளை மதியாமலும் இந்தியைத் திணித்தார். அவரது இந்தப் போக்கை மாற்றுவான் வேண்டி, பெரியார் இராமசாமி அவர்களின் தலைமையில் திரண்டெழுந்த தமிழர் பெரும் படையினர், கட்சி, சமய-மத வேறுபாடின்றி அறக்கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 'தமிழ் வாழ்க—கட்டாய இந்தி ஒழிக!' என்று முழக்கமிட்டு அறம் வழுவாது—அமைதி குலையாது—கண்ணியத்தைக் கடைபிடித்து, மறியல் செய்து ஆயிரத்திற்கு அதிகமானோர் சிறைப்பட்டனர். அறக் கிளர்ச்சித் தலைவர்களும், தாய்மார்களும், தொண்டர்களும்

(4-ம் பக்கம் பார்க்க)

★

திருவண்ணாமலையில் மாநாடுகள் துவக்கம்

நகரெங்கும் விழாக் கோலம்

பல்லாயிரம் வீரர்கள் அணிவகுத்த மகத்தான ஊர்வலம்

இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் துவக்கம்

(டிரங்க் செய்தி)

திருவண்ணாமலை, செப். 21—

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகத்தின் மூன்றாவது மாநாடு இன்று காலை துவங்கிற்று.

மாநாடுகளை ஒட்டி நகர் முழுவதும் தோரணங்களாலும் கழகக் கொடிகளாலும், வரவேற்பு வளைவுகளாலும் வெகு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாநாட்டிற்கு வ. ஆ. மாவட்டத்திலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் காலையிலிருந்தே சாரைசாரையாக மக்கள் வரத் துவங்கிவிட்டனர்.

ஏற்கனவே, திருவண்ணாமலை வந்து சேர்ந்த மக்கள், மாநாட்டுப் பந்தலின் உள்ளும் - புறமும் கூடியிருந்தனர்.

அறிவித்திருந்தபடி ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் தலைவர் சுவாமி அருணகிரிநாதர், மாநாட்டுத் திறப்பாளர் சி.வி.எம். அண்ணாமலை, அரசியல் மாநாட்டுத் தலைவர் அம்பில்-தருமலிங்கம் ஆகியோர், அலங்கரிக்கப்பட்ட கார் ஒன்றில் அமர்த்தப்பட்டு, ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் கழகக் கொடி ஏந்தி, இலட்சியங்களை விண்ணதிர முழக்கிக்கொண்டு அணிவகுத்துச் சென்றனர்.

காலை 8-30 மணிக்குத் துவங்கிய ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மாநாட்டுப் பந்தலை அடைந்தது.

பின், வரவேற்புக் குழுத் தலைவர் முல்லை-சத்தி அவர்கள் அனைவரையும் வரவேற்று மாநாட்டின் நோக்கங்களை விளக்கி, மாநாட்டைத் திறந்து வைக்குமாறு தோழர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களைகேட்டுகொண்டார்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள், 'இந்தியை என் எதிர்க்கிறோம்' என்பதை விளக்கி மாநாட்டினைத் திறந்துவைத்தார்.

பின் மாநாட்டிற்குத் தலைவராக சுவாமி அருணகிரிநாதர் அவர்களை முன்மொழிந்து வரவேற்புத் தலைவர் முல்லை-சத்தி பேசினார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் சி. பி. சிற்றரசு, திருப்பத்தூர் நடேசன், சத்தியவாணிமுத்து எம். எல் ஏ., கருத்தோவியன், என். வி. நடராசன், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

சரியாக பகல் 12-மணி அளவில், சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் தலைமை ஏற்றுக்கொண்டார்.

அவர் தலைமையுரை ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

மாநாட்டிற்கு கழக முன்னணி வீரர்கள் பலரும் வந்துள்ளனர். எண்ணற்ற பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள், மாநாட்டில் திரண்டுள்ளனர். மாநாட்டுக் காட்சிகள் திருவண்ணாமலையில் கண்கொள்ளாதவையாயிருக்கின்றன.

பம்பாய், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் சிறு தொழில்களுக்கான பயிற்சி உற்பத்தி நிலையங்கள், மாதிரிப் பட்டறைகள், பொது வசதி நிலையங்கள் ஆகியவைகளை ஏற்படுத்த இந்தியப் பேரரசு தாராளமாக அனுமதியளித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'அறவழி நின்று அமைதியை நிலைநாட்டுங்கள்'

'அரசாங்கத்தின் போக்கு வருந்தத்தக்கது-வன்மையாகக் கண்டிக்கத்தக்கது'

முதுகுளத்தூர் சம்பவம் பற்றி பொதுச்செயலாளர் வேண்டுகோள்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம், சிவகெங்கை ஆகிய வட்டங்களைச் சார்ந்த சிற்றூர்களில் இரு வகுப்புகளிடையே கலவரங்கள் மூண்டு கொலை—கொள்ளை—தீயிடுதல் போன்ற அக்கிரமங்கள் தாண்டவமாடவும், அவற்றின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்று ஊரைவிட்டே ஓடும்படியாகவும் நிலைமைகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டு நாம் துக்கமும் - துயரமும் அடைகிறோம்.

சென்னை அரசியலார் முன்னெச்சரிக்கையாக காலாகாலத்தில் தலையிட்டு தவறான வகுப்புணர்ச்சி தலைதூக்காமல் அமைதி நிலைநாட்ட முயன்றிருந்தால் இப்படிப்பட்டக் கேடுகள் அங்கெல்லாம் மூண்டிருக்கா என்று அப்பகுதியில் உள்ளோர் கூறுகின்றனர். கலவரங்களினால் கொலைகள் ஏற்பட்டது போதாதென்று போலீசார் துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்து மேலும் சிலரை சுட்டுத் தள்ளியிருப்பது வருந்தத்தக்கதோடு, வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும். அறவழியில் அமைதியை நிலைநாட்டுவதுதான் பொறுப்புள்ள சர்க்காரின் முக்கியக் கடமையாகும். இனியேனும், முதலமைச்சரும்—பிற அமைச்சர்களும் நிலைமைகளை நேரில் சென்று கண்டறிந்து தக்க நடவடிக்கைகளை எடுத்து உடனடியாக அமைதியை நிலைநாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கலவரம் மூண்டுள்ளப் பகுதிகளில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும்—கழக ஆதரவாளர்களும்—பொதுமக்களும் அமைதியை நிலைநாட்டுவதற்கான எல்லா முயற்சிகளையும் கடைப்பிடிக்குமாறு இதன் மூலம் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

20—9—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—9—57 சனி

புதிய ஊராட்சிக் கூட்டு

வடமதுரையில் ஆறு நிலவரி வட்டாரங்களை இணைத்து ஊராட்சிக் கூட்டு ஒன்றை முதலமைச்சர் காமராசர் துவக்கி வைத்திருக்கின்றார். இப்புது அமைப்பு செயல்பட்டபோதிலும், எப்பொழுதும்போல் ஊராட்சி மன்றங்களும் செயல்பட்டுவரும். நிலவரி வட்டாரங்களுக்கு ஒன்றாக 'சர்க்கிள்' செயற்குழு அமைக்கப்பெறும். இவ்வாறு அமைக்கப்பெறும் செயற்குழுவின் பிரதிநிதிகளைக் கொண்டதுதான் புதிய ஊராட்சிக் கூட்டு என்பதாகும்.

கிராமத்தில்பாதைஅமைத்தல், தெருக்கூட்டல், விளக்கேற்றல், குடிநீர் வசதி செய்தல் போன்ற சாதாரண பணிகளைச் செய்து வரும் பொறுப்பை கிராம ஊராட்சி அமைப்புக்கள் நிறைவேற்றிவரும். அப்பணிகளுக்காகத் தேவைப்படும் பண வசதிக்காக, வீட்டு வரி, வண்டி வரி, தொழில் வரி, நிலவரி மீது 'செஸ்' ஆகிய வரிகளை விதித்து தனது பணத் தேவைக்கு வசதி செய்து கொள்ளவேண்டும் ஊராட்சி அமைப்புக்கள்.

கிராம ஊராட்சி மன்றங்களுக்கு என 1950-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தில் கண்டுள்ள அதிகாரங்கள் அனைத்தும், புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஊராட்சிக் கூட்டுக்குத்தான் உண்டு என்று அரசாங்க அறிக்கை அறிவிக்கின்றது. அச்சட்டத்தில் கண்டுள்ள அதிகாரங்கள் ஒரு பக்கம் இருக்க, வேறு அதிகாரங்கள் சிலவும் புதிய ஊராட்சிக் கூட்டினிடம் ஒப்புவிக்கப்படுகின்றன. அதாவது, இப்பொழுது மாவட்டக் கழகங்களின் பொறுப்பில் இருந்துவரும் சிறு - பெரும் பாதைகளும், அவைகளுக்குத் தொடர்புடைய கட்டிடங்களும் இனி புதிய ஊராட்சிக் கூட்டின் நிர்வாகத்திற்கு மாற்றப்படும். மாவட்டக் கழகம் இதுவரை நிர்வகித்துவந்த தாய்—சேய் நல விடுதிகளும், துவக்கப் பள்ளிகளும் மேற்படி புதிய கூட்டினிடம் ஒப்படைக்கப்படும். மாவட்டக் கழகத்தின் பொறுப்பில் விடப்பட்டிருந்த பணிகள் அனைத்தும் இனி புதிய ஊராட்சிக் கூட்டினிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

தேசிய நல விரிவுத் திட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இப்புது ஊராட்சிக் கூட்டு உருவாக்கப்படுகிறது. எனவே, தேசிய விரிவுத் திட்டப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் ஊராட்சிக் கூட்டு மூலம் இனி செயல்படுத்தப்படும். அதன் விளைவாக, திட்டப் பிரதேச அதிகாரி இனி, ஊராட்சிக் கூட்டின் நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிவார். மற்ற அதிகாரிகளின் நிலையும் அதுதான்.

இப்புது ஊராட்சிக் கூட்டைத் துவக்கிவைத்த முதலமைச்சர், விரிவான மக்களாட்சி அடிப்படையில் கிராம நிர்வாகத்தை நிர்மாணிப்பதுதான், இப்புது முயற்சியின் விழுமிய நோக்கம் என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், இப்புது அமைப்பைத் தோற்றுவிப்பதில் முதலமைச்சர் கையாண்டுள்ள முறையும் போக்கும், அவருக்குள்ளதாகச் சொல்லப்படும் மக்களாட்சி உணர்வை மெய்ப்பிப்பதாகக் காணோம். மக்களாட்சி முறையை ஒழித்துவிட்டு எதேச்சாதிகார முறை மூலமே இப்புது அமைப்பை முதலமைச்சர் உருவாக்கி இருக்கின்றார் என்பதுதான் உண்மையாகும்.

இது பற்றிய புதிய சட்டம் அக்டோபரில் நடைபெற இருக்கும் சட்ட மன்றக் கூட்டத்தில் சட்டமாக்கப்பட இருக்கிறது. அச்சட்டம் உருவான பிறகு இப்புதிய ஊராட்சிக் கூட்டை, அவர் உருவாக்க முன்வருவது தான் மக்களாட்சி முறைமீது முதலமைச்சருக்குள்ள பற்றுதலைக் காட்டுவதாக அமையும். ஆனால் அதுவரையில் பொறுமை காட்ட மனமில்லாது, இப்புதுக் கூட்டை ஒரு நிர்வாகக் கட்டளை மூலம் அவர் உருவாக்கி இருப்பது, மக்களாட்சி முறையுமன்று— விரும்பக்கூடியதுமன்று. இப்புதுக்கூட்டை உருவாக்குவதில் முதலமைச்சர் காட்டியுள்ள தீவிரம் அவர் செய்கையில் ஏதாவது அரசியல் நோக்கம் இருந்தாலும் இருக்கக்கூடும் என்ற ஐயத்தை அளிக்கிறது. இப்புதுக் கூட்டு நிர்மாணம் பற்றி மதுரை மாவட்டக் கழகத்தில் நிகழ்ந்துள்ள வாதப் பிரதிவாதங்கள், மேற்குறிப்பிட்ட ஐயத்தை உறுதிப்படுத்துகிறது.

தென்னாட்டை சுரண்ட டில்லியின் தீவிரம்!

ஐதராபாத், செப். 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எண்ணெய் வித்துகள் வளர்ச்சிக்கான திட்டங்களை இந்தியப் பேரரசு தீட்டியுள்ளது. இதற்கு ரூ. 29·19 இலட்சம் செலவிடவும், இதில் பாதித் தொகையை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்ட காலத்தில் 75·5 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யத் திட்டம் சுறுசுறுப்பாக தீட்டப்பட்டுவிட்டதாம்.

வடநாட்டு மாநிலங்களில் இதற்கான வசதிகள் அதிகமில்லையாம். அந்நியச் செலாவணிக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறைக்குத் தென்னாட்டின் வளம் சுரண்டப்படும் இரகசியத் திட்டமென்றே இதனைச் சிலர் கருதவேண்டியுள்ளது.

தென்னாட்டில் உள்ள ஆந்திர மாநிலம் மட்டும் 15,50,000 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய வேண்டுமாம்.

இதற்கு அடுத்தபடியாக சென்னை மாநிலம் 11,00,000 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய வேண்டுமாம்.

இந்தத் திட்டங்கள் மிகவும் அவசரமும், அவசியமும் கொண்டவை எனக் கருதி, மாநில அரசாங்கம் உடனே ஆக்க வேலைகளில் துரிதமாக ஈடுபட வேண்டும் என்று டெல்லி எசமானர்கள் உத்தரவிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

'இரண்டாம் திட்டத்தில் நமது பங்கினை மேலும் வெட்ட அனுமதிக்கக்கூடாது'

'திட்டத்தின் பிரதான அம்சங்கள் கேரளத்தில் எதுவும் இல்லை'

'ஆபத்து நெருங்குகிறது; வேற்றுமைகளை மறந்து - எழுவீர்'

கேரளரை அழைக்கிறார் முதலமைச்சர் நம்பூதிரிபாட்

திருவனந்தபுரம், செப். 19—

"இரண்டாம் திட்டத்தில் கேரளத்தின் பங்கினை மேலும் வெட்டுவதற்கு டெல்லி சர்க்கார் முயற்சித்தால், அதற்கு எதிராக கேரள மக்கள் அனைவரும் திரண்டு எழவேண்டும்; கட்சி வேற்றுமைகளை மறந்து போராடவேண்டும்"

என்று கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாட் தெரிவித்திருக்கிறார்.

பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:—

"இரண்டாம் திட்டத்தின் அளவையே சுருக்கிவிடுவது என்று துரதிருஷ்டவசமாக டெல்லி சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"அதன்படி, வேறெந்த மாநிலத்தின் திட்டமும் வெட்டப்படுவதைவிட, கேரளத்தின் திட்டம் அதிகமாக வெட்டப்படும் என்ற அபாயம் இருக்கிறது. ஏனென்றால், திட்டத்தை நிறைவேற்றுவதில் விழக்கூடிய பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்குத் திட்டக் குழு யோசித்துக்கொண்டிருக்கும் வழிகளுள் ஒன்று, திட்டக் குழுவினர் கருதுகிறபடி திட்டத்தின் பிரதான அம்சங்களான இரும்பு உற்பத்தி, சுரங்க வேலைகள், போக்குவரத்து, மின்சார உற்பத்தி இவற்றுடன் சம்மந்தப்பட்டவை, இவற்றிற்கான திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதற்கு வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை கைவிட்டுவிடுவது என்பதாகும்.

"இதன்படி பார்த்தால், திட்டத்தின் பிரதான அம்சங்கள் என்று கேரளத்தில் ஏதாவது உண்டா என்றால், 'பூஜ்யம்'தான். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில், நமக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெரும் பங்கினைப் பறிகொடுத்துவிடாமல் இருக்க ஒவ்வொரு கேரளனும், கட்சி மற்றும் இதர வேற்றுமைகளை மறந்து, திட்டக் குழுவிடமும், மத்திய சர்க்காரிடமும் நமது குறைந்தபட்சத் தேவைகளை ஒரு குரலில் ஒன்றுபட்டு வற்புறுத்தியாக வேண்டும்.

"எனவே, எல்லாக் கட்சியினரும், பொது நிறுவனங்களும் இந்த வகையில் சர்க்காருக்கு உதவ, விருப்பத்துடன் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

இறந்தவர்கள் கண்கள்

நிரந்தரமாகப் பாதுகாக்க முடியும் என நம்பிக்கை

உயிரற்ற உடல்களிலிருந்து எடுக்கப்படும் கண்களிலிருந்து நீர்ப்பசையை நீக்கி அவைகளைக் கால வரம்பின்றி பாதுகாத்து வைக்கக்கூடிய ஒரு புது மருத்துவ முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் கண்ணை அகற்றி, பாதுகாத்து, பார்வையற்றவர்கள் அல்லது பார்வை குறைந்தவர்களில் அந்தக் கண்களைப் பொருத்த டாக்டர்களுக்கு இதற்கு முன் 72 மணி நேரந்தான் அவகாசம் இருந்தது. ஆனால் அணு ஆராய்ச்சிப் பிரிவின் உதவியுடன் இன்றைய விஞ்ஞானிகள், கண்ணின் சவ்விலிருந்து நீர்ப்பசையை நீக்கி, அதனை கிளிசரைனில் பாதுகாத்து வருகின்றனர்.

அந்நியர் உதவி பற்றி டி. டி. கே., நேரு!

புதுடில்லி, செப். 20—

"இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்னர் இரயில்வேக்களின் வளர்ச்சிக்காக ரூ. 40 கோடியும், மற்ற வசதிகளுக்காக ரூ. 10 கோடியும் அந்நிய உதவி கிடைத்தது; இரண்டாவது போர் முடிந்தவுடன் அக்கடன் திருப்பித் தரப்பட்டுள்ளது; இந்திய தொழில்துறையில் வலிவு பெறும்வரையில் அந்நியர் உதவியைக் கொண்டேதான் அதன் வளர்ச்சிக்கான வலிமையைத் தேடவேண்டும்; இவ்வாறு செய்வதில் தவறு ஒன்றுமில்லை; இதுவே, இந்தியாவின் நீண்டகாலத் திட்டமாகும்"

என்று, இந்தியப் பேரரசின் நிதி அமைச்சர் டி. டி. கே. அமெரிக்கா புறப்படுவதற்குமுன் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

★

'ஆபத்தானது' என்கிறார் நேரு!

"நாடு முன்னேற வெளியார் உதவியை மட்டும் நம்பிக்கொண்டிருப்பது ஆபத்தானது; நம் கையே நமக்கு உதவி என்ற சிறந்த வழியையே நாம் எப்போதும் நம்பி, அதையே பின்பற்றவேண்டும்"

என்று பண்டித நேரு; இந்தியாவின் திட்டம்பற்றிப் பேசுகையில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மீண்டும் வராது?

தாய்லாந்த், பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களில் ஏற்பட்ட நிலையைக் கொண்டு, உலக சுகாதார நிறுவனம் ஆராய்ந்தறிந்ததன் முடிவுகளின்படி மீண்டும் ஆசிய நாடுகளில் 'இன்புளுயன்சா' எனும் நச்சுக் காய்ச்சல் வராது என்று புதுடில்லி வந்துள்ள அமெரிக்க டாக்டர் பர்னி தெரிவித்துள்ளார் என்று செய்தி வெளியாகியுள்ளது.

'தமிழ்நாடு' பெயர் மாற்றம் கூடாதாம்!

சென்னை அமைச்சரின் குதர்க்கம்

'சென்னை மாநிலம்' என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பது பற்றிய பிரச்சினையில், தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் புதிய குதர்க்கவாதத்தில் ஈடுபட்டு, தனக்குத் தெரிந்த காரணத்தை வெளியிட்டுள்ளார்.

சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பதின் காரணமாக நன்மை ஏதும் ஏற்படாதாம்!

நாட்டின் பெயர் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டுமாம்!

தேசிய இனத்தைக்கொண்டு எப்போதும் நாட்டின் பெயரை அமைக்கக் கூடாதாம்!

தமிழகத்தில் தொழில்வளர்ச்சி குறைவுக்குக் காரணம்?

தொழில் அமைச்சர் விளக்கம்

குன்றக்குடி, செப். 20—

"தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாததற்குக் காரணம் தமிழ்நாட்டில் பெரும் பணக்காரர்கள் தாங்களாகவே விருப்பத்துடன் பெரும் தொழில்களில் மூலதனம் முதலீடு செய்ய முன்வராததுதான்"

என்று, சென்னை தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பெரிய தொழில்கள் ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சித்ததாம்; ரூ. 5 கோடி முதலீடு செய்து காகிதத் தொழிற்சாலையையும், மற்றத் தொழில்களையும் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்பியதாம்; ஆனால், யாரும் மூலதனம் போட முன்வரவில்லையாம்.

அந்த திட்டங்களில் சிலவற்றையேனும் அரசாங்கமே நடத்தலாம் என்று எண்ணியுள்ளதாம்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

7—9—57-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 1 புள்ளிகுறைந்து 371-ல் நின்றது; அரிசி விலை குறைவே இதற்குக் காரணம்.

இந்தியாவில் இரும்பு, எஃகு உற்பத்தி

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, செப். 19—

1957 ஜுன் முடிய மூன்று திங்களில் மொத்தம் 1,20,600 டன் இரும்பு சத்துக்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று இந்திய சுரங்க நிறுவனம் தெரிவித்துள்ளது.

பீகார் 5,12,000 டன்களும், ஒரிசா 4,93.000 டன்களும், மைசூர் 1,25,000 டன்களும், ஆந்திர மாநிலம் 55,000 டன்களும் உற்பத்தி செய்துள்ளன.

சென்ற ஆண்டு இந்தக் காலத்தில் இருந்த உற்பத்தியைவிட 63,000 டன் அதிகமாக இந்த ஆண்டு இரும்பு உற்பத்தி அதிகரித்துள்ளதாம்.

கடந்த 6 மாத காலத்திற்கு மதிப்பிட்டுப் பார்க்கும்போது மொத்தம் 25,09,000 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், இதே ஆறுமாத காலத்தில் சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டதைவிட 26,000 டன் இந்த ஆண்டு குறைவு என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

40,000 தொழிலாளர்கட்கு 'வெகுமதி'

ரூ. 37 இலட்சம் தரப்படுகிறது

கோவை, செப். 17—

கோவை மாவட்டத்தில் 41 துணி ஆலைகள் உள்ளன. சமீபத்தில் வர இருக்கும் தீபாவளிப் பண்டிகையின்போது தொழிலாளர்களுக்கு வெகுமதி (போனஸ்) தருவது பற்றி சென்னை தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் முன்னிலையில் ஆலை அதிபர்களுக்கும்— தொழிலாளர்களுக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

33 ஆலைகளில் 3 மாத ஊதியமும், 7 ஆலைகளில் 2 மாத ஊதியமும், 1 ஆலையில் ஒருமாத ஊதியமும் இடைக்கால வெகுமதியாக அளிக்கப்படும்.

மொத்தம் 40,000 தொழிலாளர்களுக்கு ரூ.37 இலட்சம் வெகுமதியாக உடனடியாகத் தரப்படும்; இது இடைக்கால ஏற்பாடாகும். இறுதியாகதொழிலாளர்களின் 'போனஸ்' பற்றி அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள தனி நீதி மன்றம் முடிவு செய்யும்.

நாட்டை ஆளும் தகுதி எது?

பதவியுடன் பவனிவந்து போட்டியிடுவதா சனநாயகம்?

பொதுச்செயலாளர் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

நெல்லை, செப். 20—

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நெல்லையில் 25-8-57 அன்று மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நெல்லைச் சந்திப்பில் உதய சூரியன் படிப்பகத்தைத் திறந்து வைக்க வருகை தந்த நெடுஞ்செழியன் அவர்கட்கு நெல்லை நகர தி. மு. கழகம், மற்றும் பல படிப்பகங்கள், மன்றங்கள் சார்பில் வரவேற்பிதழ்கள் அளிக்கப்பட்டன.

அன்று மாலை 4 மணிக்கு பொதுச்செயலாளர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர். ஊர்வலம் அண்ணா அறிவகத்திலிருந்து புறப்பட்டது. அண்ணா அறிவகத்தினர் பொதுச்செயலாளருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தனர். வழியில் பல இடங்களில் பொதுச்செயலாளருக்கு மலர் மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

நகரில் 5 இடங்களில் பொதுச்செயலாளர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியே சென்று, நெல்லை சந்திப்பு ஆற்று மணர்பரப்பையடைந்தது. அங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் சுமார் 35,000 பேர் கலந்துகொண்டனர்.

பொதுக்கூட்டத்தில் பல மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் தோழர் ப. இலக்குமணன் அவர்களால் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன; மலர் மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன் தலைமை வகித்தார்.

தீர்மானங்கள்

சென்னை மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் வைக்க வேண்டும் என்றும், நான்குனேரி தாலுகாவை குமரி மாவட்டத்துடன் இணைப்பதா, நெல்லை மாவட்டத்துடன் இணைப்பதா என்ற பிரச்சினையில் அத்தாலுகா மக்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்றும், நான்குனேரி மக்களின் கருத்தைக் கேட்பது போல் வள்ளியூரிலும் இராதாபுரத்திலும் மக்களின் கருத்தைக் கேட்டறிய வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாடகமாடிகளுக்கு நாடாளத் தெரியுமா? தி. மு. க. சினிமாக் கட்சி—என்றெல்லாம், காங்கிரஸ்காரர்கள் கூறினர். தி. மு. கழகத்தில், சினிமாத் துறையில் சம்பந்தப்பட்டவர்கள் 4—5 பேர்களுக்குமேல் கிடையாது. ஒரு இலட்சம் உறுப்பினர்களுக்கு அதிகம் கொண்ட தி. மு. கழகத்தில் 4—5 பேர்கள் சினிமாத் துறையில் சம்பந்தப்பட்டிருப்பதால் தி. மு. க. எப்படி சினிமாக் கட்சியாகிவிடும்? சினிமாக் கட்சி என்பதற்காக நாங்கள் வெட்கமோ, துக்கமோ கொள்ளவில்லை.

"தி. மு. கழகத்தை சினிமாக் கட்சி என்ற காங்கிரஸ் கட்சி, தேர்தல் பிரசாரத்தின்போது 1400 அடி சினிமாப் படம் எடுத்தது ஏன்? தேர்தலில், தான் உபயோகித்த அதே பிரசார வசதி இதர கட்சிகளுக்கு மறுக்கப்பட்டது ஏன்? இதுதானா ஜனநாயகத் தேர்தல் நடத்தும் இலட்சணம்?

"காங்கிரஸ் தயாரித்த சினிமாப் படத்தில் மாட்டுக்குப் பயந்து ஓடுகிற உங்களிடம் (தி. மு. க.) நாட்டை எப்படி ஒப்படைப்பதெனக் கேட்பது மாதிரி காட்டப்பட்டது. இது ஜனநாயகத்தைக் கொலை செய்வதாகும். நாட்டை ஆளுவதற்கு மாட்டிற்குப் பயப்படுகிறானா? இல்லையா? என்பதுதான் பரீட்சை முறையா?

"தேர்தல் காலத்தில் மந்திரிகள் சர்க்கார் வேலை பார்க்காமல் சம்பளம் பெற்று, பதவியுடன் பவனிவந்து போட்டியிட்டார்கள். இதுதானா, ஜனநாயகத் தேர்தல்? அதிகாரமும், அதிகார இயந்திரமும் ஆளும் கட்சிக்கு உதவியாக தேர்தலில் உபயோகிக்கப்பட்டதால் தானே காங்கிரஸ் வெற்றிபெற முடிந்தது? செஞ்சிக்கோட்டைக்குப் போனவன் எப்படி தேசிங்கு ராஜன் ஆகமாட்டானோ அப்படியே காங்கிரஸ் கோட்டையில் புகுந்தவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களல்ல!

தமிழர் நிலை

"இராசேந்திர சோழன் வடநாடு வரை சென்று வென்ற காலம்போக இன்று தமிழன் வெளிநாடுகளில் கூலி வேலைக்குச் செல்லும் நிலை வந்திருக்கிறது. இப்போது வெளிநாட்டிலிருந்தும் 6, 7, இலட்சம் தமிழர்கள் விரட்டப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை நேரு உணர்கிறாரா? இவர்கள் வடநாட்டினராக இருந்தால் நேரு கவனிக்காமல் இருப்பாரா?

வெள்ளையன் வரி

"வெள்ளையன் விதித்த கொடுமையான வரிகளில் ஒன்றையாவது காங்கிரஸ் ஆட்சியில் எடுக்கவோ, குறைக்கவோ செய்தார்களா? இவர்கள் ஆட்சியில் முன்னைவிட எல்லா வரிகளும் உயர்ந்திருப்பதையும், பல புதிய வரிகள் புகுத்தப்பட்டிருப்பதையும்தான் காண்கிறோம்.

அன்றும் இன்றும்

"பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமென்றால் வெள்ளையன் ஆட்சியில் கட்டணம் கிடையாது; இன்று ரூ. 3 வரி கட்டினால்தான் கூட்டம் நடத்த முடியும்!

"நேருவைக் குறைத்து மதிப்பிடும் கபோதியல்ல நான்; நேரு புகழடைந்தார்—ஆனால் நாடு புகழடையவில்லை! நேரு வளர்ந்தார்—ஆனால், நாடு வளரவில்லை! இதைத்தான் நான் கூறுகிறேன்.

நாட்டின் நிதி பாழாகிறது

"மந்திரிகள், நேரு சுற்றுப் பிரயாணத்தின் பெயரால் நாட்டின் நிதி எவ்வளவு பாழாகிறது? இவர் இவ்வாறு சுற்றுப்பிரயாணம் செய்வதால், போலீசாருக்கு தங்களின் தினசரி வேலைகள்கூட, கவனிக்க முடியவில்லை.

"இன்று போலீசாருக்கு, மந்திரிகளின் பின்னே சுற்றுவதும், சாராயப் பானைகளைக் கண்டுபிடிப்பதிலும்தான் காலம் கழிகிறது. இந்த நிலைமையை மாற்றி போலீசாரை அவர்களது வேலைகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும்."

முக்கூடல்:

25—8—57-ல், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு முக்கூடல் தி. மு. க. கிளையின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டது.

பாப்பாங்குளத்தில் அன்று முற்பகல் நடைபெற்ற அம்பை வட்டார ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் பேசிவிட்டு திருநெல்வேலி செல்லும் வழியில் முக்கூடல் சொக்கலால்புரத்தில் பிற்பகல் 2 மணிக்கு தி. மு. க. கிளைக் கழகத்தினர் வரவேற்பளித்தனர்.

முக்கூடல் தி. மு. க. செயலாளர் மா. சு. முத்துக்குட்டி பொதுச்செயலாளருக்கு மாலை அணிவித்தார்; நெடுஞ்செழியன் அவர்கள் தி. மு. க. கொடியை ஏற்றிவைத்தார். அவருக்கு ஒரு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

சென்னை சட்டசபை உறுப்பினர் தோழர் டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் பேசுகையில், தி. மு. கழகம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகிறதென்று குறிப்பிட்டார்.

பிறகு இரா. நெடுஞ்செழியன் தமக்களித்த வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசுகையில், தி. மு. கழகக் கிளைகள், பட்டிதொட்டிகளிலும் நிறுவப்பட்டு வருவதில் மாற்றுக் கட்சியினர் பொறாமை கொள்கிறார்களென்றும், அதற்காக நாம் கவலைகொள்ளக்கூடாதென்றும் கூறினார்.

தொழிலாளர்கள் சார்பிலும், கழக ஆதரவாளர்கள் சார்பிலும் அவருக்கு மலர்மாலைகளும், கைத்தறி துணிகளும் வழங்கப்பட்டன. இந்த வரவேற்புக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தச்சநல்லூர்:

தச்சநல்லூர், ஆக. 26—

நேற்றிரவு தச்சநல்லூர் வ. உ. சி. திடலில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்திற்கு வழக்கறிஞர் எஸ். இரத்தினவேல் பாண்டியன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தம் உரையில் திராவிட நாடு பிரச்சினையை வலியுறுத்தினார்.

பல சங்கங்கள் சார்பில் இரா. நெடுஞ்செழியனுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கள்ளிகுளம்:

26—8—57 இரவு 7 மணியளவில் மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கள்ளிகுலத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தது.

தலைமையுரைக்குப்பின் பேசிய தோழர் எஸ். சிவசாமி அவர்கள் திராவிடம் ஏன் பின்தங்கிக் கிடக்கிறதென்பதை விளக்கினார்.

பின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நீண்ட உரை நிகழ்த்தி ஏன் திராவிடம் பிரியவேண்டும் என்பதையும், புதிய வரிகளைக் கண்டித்தும் பேசினார்.

பொதுசெயலாளர் அவர்களுக்கு மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்து சிறப்பித்தார்கள். கூட்டத்தில் கள்ளிகுளம் தி. மு. க. பொருளாளர் தோழர் சமரியா பிச்சை அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

விருதை:

7—9—57 இரவு 9 மணிக்கு விருதை அம்மன்கோயில் திடலில், தோழர் தானியல் இன்னிசையுடன் தோழர் கனகசபாபதி தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர்கள் அரங்கநாதன், சுப்பையா, இரத்தினம், கணபதி, தியாகராசன் ஆகியோர் பேசினர்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தற்கால அரசியல்நிலை குறித்தும், வடக்கு-தெற்கு என்பது பற்றியும், திராவிட நாடு ஏன் பிரியவேண்டும் என்பது பற்றியும் அழகுற எடுத்து விளக்கினார்.

பொதுச்செயலாளருக்கும் தலைவருக்கும் நகர தி. மு. கழகம், 2, 3-வது வார்டு தி. மு. கழகத் தோழர்கள், எம். எஸ். பி. படிப்பகம், அண்ணா மன்றம், வெள்ளூர் நண்பர்கள் படிப்பகம், விருதுநகர் இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ் ஷாப் தொழிலாளர்கள், எம். ஜி. ஆர். ஒளியகம், விருதை குதிரை வண்டித் தொழிலாளர்கள், சாவித்திரி நாடகமன்றம், தெற்கு வாசல் தி.மு. கழகத் தோழர்கள், தூத்துக்குடி மஜீத் படிப்பகம், செங்குன்றபுரம் தி. மு. கழகம், கலக்கரை வி. டி. மில்ஸ் தொழிலாளர்கள், விருதை செந்திக்குமார கல்லூரி மாணவர்கள், எம். எஸ். பி. எஸ். படிப்பகம், எம். ஜி. ஆர். கலாமன்றம், பெ. சி. சி. படிப்பகம், குந்திலிப்பட்டி தி. மு. கழகத் தோழர்கள், எம். ஜி. ஆர். அபிமானிகள், கே. எம். வடிவேல் ஆகியவர்களின் சார்பாகக் கைத்தறித் துண்டுகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்தில் நகர தி.மு. கழகச் சார்பில் ரூ. 10; எம். ஜி. ஆர். அபிமானிகள் சார்பில் ரூ. 4-8-3; மற்றும் தனிப்பட்டவர்கள் சார்பாகவும் மொத்தம் ரூ. 27—8—3 சேலம் வழக்கு நிதிக்காக பொதுச்செயலாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு கூட்டத்தினர் எல்லோரும் அமைதியாக இரண்டு நிமிடநேரம், மௌனம் அனுசரித்தனர்.

'கலைவாணர் இறந்தது குறித்து இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை கலை உலகுக்கும் அன்னார் குடும்பத்துக்கும் தெரிவித்துக்கொள்கிறது' என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

'உழைப்பு நல்வாழ்வுக்கு பயன்படவேண்டும்'

'மன இருளைபோக்க நற்கருத்துக்களை மக்கள் ஏற்க வேண்டும்'

மண்ணையும் விண்ணையும் நம்பிவாழும் கிராம மக்களின் பரிதாப நிலை பற்றி அண்ணா

"கிராமங்கள், மாற்றாந்தாய்ப் பிள்ளைகளைப்போல நடத்தப்படுகின்றன. சமுதாயத்தில் கீழ்சாதி—மேல்சாதி எனப் பிரிக்கப்பட்டிருப்பதுபோல, நகரங்களும், கிராமங்களும் உள்ளன. இப்பொழுதுதான் கிராம மக்களும் கேள்விகள் கேட்கக்கூடிய நிலையில் வந்திருக்கின்றனர்.

"நம் நாட்டில் பல கிராமங்களுக்குச் சரியான போக்குவரத்து வசதி கிடையாது. சில கிராமங்கள், மழைக் காலத்தில் தீவுபோலவும், கோடையில் பாலைவனம்போலவும் காட்சியளிக்கின்றன.

"கிராம மக்கள் மண்ணையும் விண்ணையும்தான் நம்பியிருக்கிறார்கள். வானம் கருத்தால்தான் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். அவர்கள் உழைத்து உழைத்துத்தான் உலகத்தை இவ்வளவு நாகரீகத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றனர்.

"கிராம மக்களின் உழைப்பு கிராம மக்களுக்குப் பயன்படவேண்டும். நம் நாட்டில் அந்த நிலை இன்னும் ஏற்படவில்லை. இந்த நிலை மாற வேண்டும்."

—இவ்வாறு, அண்ணா அவர்கள் செய்யாறு தாலுகா, வடமணப்பாக்கம் கிராமத்தில், ஊராட்சித் தெரு, மின்னொளி விளக்கேற்று விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழா, கடந்த 16—9—57 இரவு 9-30 மணிக்கு, திருவத்திபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. இராசு(முதலியார்) தலைமையில் வடமணப்பாக்கத்தில் நடைபெற்றது.

வடமணப்பாக்கம் ஊராட்சி மன்றச் சார்பில் அண்ணா அவர்களுக்கு வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது.

மின்னொளி விளக்கேற்று விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் அண்ணா அவர்கள், தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்கள். தன் மீதும், தான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் மீதும் கொண்டுள்ள பற்றின் காரணமாகவே இவ்விழாவுக்குத் தன்னை அழைத்திருப்பதாய்க் கருதுவதாகக் குறிப்பிட்டுவிட்டு, மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :

"ஊரின் இருளைப் போக்க மின் விளக்குகளை அமைத்துவிட்டீர்கள்; அதேபோல, மன இருளைப் போக்க வேண்டும். சில பொருள்கள் பழையன வாகிவிட்டால் அழுக்காகிவிடும். எண்ணங்களும், ஏற்பாடுகளுங்கூட முன்பு பயன்பட்டவை, இன்று பயனளிப்பதில்லை.

"நாமும் உலகின் பல நாடுகளோடும் போட்டியிடவேண்டுமானால் விஞ்ஞானத் துறையில் நாம் வளர்ந்தாகவேண்டும். மின்சாரம் ஒளிக்குமட்டுமின்றி தொழிலுக்கும் பயன்படவேண்டும். மின்சாரத்தினால் உழைப்பு குறைவு; பலன் அதிகம். விஞ்ஞானம் என்பது மனிதனின் உழைப்பைக் குறைத்துப் பலனை அதிகம் தருவதாகும். விஞ்ஞானத்தை நல்ல காரியத்துக்கும் பயன்படுத்தலாம்; தீய காரியங்களுக்கும் பயன்படுத்தலாம்.

"இப்போது மக்கள் உழைப்பதெல்லாம், தாங்கள் சாகாமல் இருக்கவேண்டுமே என்பதற்குத்தான்; வாழ்வதற்காக உழைக்கவில்லை. வாழ்வு என்றால் நிலையான — நிம்மதியான — ஓய்வான—நல்வாழ்வு வாழவேண்டும். அத்தகைய நல்வாழ்வுக்கு மின்சாரம் மட்டுமின்றி, மின்சாரம் போன்ற நற்கருத்துக்களையும் மக்கள் ஏற்கவேண்டும்"

துவக்கத்தில் தலைவர் திரு. இராசு(முதலியார்) பேசுகையில், 'நாடெங்கும் அறிவொளி பரப்பி வரும் அண்ணா அவர்கள், ஊரிலுள்ள தெரு இருளைப் போக்க ஒளி விளக்கு ஏற்றிவைக்க வந்திருப்பது மிகப் பொருத்தமானது' என்றார்.

காஞ்சி பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் தோழர் மா. கி. தசரதன் பேசுகையில், கிராம மக்களின் தாழ்நிலையை விளக்கி, அதைப் போக்கும் வழிகளை எடுத்துக் கூறினார்.

வடமணப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. அரங்கநாதன் நன்றிகூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

சி.வி.எம். அண்ணாமலை துவக்கவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டனர். இரண்டு மாதம், முதல், ஈராண்டுவரை என்ற அளவில் கடுமையான கிரிமினல் சட்டங்களின்கீழ் தண்டனை தரப்பட்டனர்.

"சிறைக் கொடுமை தாளாத நிலையில் அருமைத் தோழர்களான, தாளமுத்து-நடராசன் ஆகியவர்கள் சிறையிலேயே உயிரிழந்தனர். அக்கோரத் தன்மையைக் கண்டும் மனம் மாற்றம் பெறாத ஆச்சாரியார் அவர்களை, சென்னை சட்டமன்றத்தில், மறைந்த பன்னீர்செல்வம் அவர்கள் கேள்வி கேட்டபோது ஆச்சாரியார், கிண்டலும் கேலியும் பேசியதை நினைத்தால் இன்றும் நம் உள்ளம் துடிக்கிறது.

"அத்தகைய கேலிக்கும் கிண்டலுக்கும் நல்லதொரு படிப்பினையைக் கற்பிக்கும் தன்மையில் எங்களின் இதயத் துடிப்பிற்கு ஓர் அமைதி ஏற்படும் வகையில், மக்களிடம் நன்மதிப்பும் நெருங்கிய தொடர்பும் அற்ற நிலையில் இருந்துவந்த ஜஸ்டிஸ் கட்சியானது, பெரியார் இராமசாமி அவர்களின் தலைமைக்கு மாற்றப்பட்டு, என்போன்ற சுயமரியாதை இளைஞர்களையும், தொண்டர்களையும் இரண்டறக் கலக்கும் சூழ்நிலை உண்டாக்கப்பட்ட பின்னர், இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒரு புதிய பொலிவும், நல்லதோர் வலிவும் பெற்றது. அதன் பயனாய் கிளர்ந்தெழுந்த தமிழர் பெரும் படையினர், புற்றீசலெனச் சிறைபுகும் நிலை கண்டபின் சென்னை அரசாங்கம் கட்டாய இந்திக் கொள்கையைக் கைவிட்டது; 'கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டம்' வெற்றி பெற்றது; இதனை அரசியல்வாதிகள் அனைவரும் நன்கறிவர்.

"அன்றைய நமது உரிமைக் கோரிக்கைகள் வேறு தன்மை உடையது என்பதை நான் துவக்கத்தில் குறிப்பிட்டேன்; அதாவது, 'நாங்கள் தமிழர்கள்; எங்கள் தாய் மொழி தமிழ்; எமது அருமைத் தாய் மொழியை நூற்றுக்குப் பதினேழு பேர்கள்கூட கட்டாயமாகக் கற்க வசதியும், வாய்ப்பும் பெறாமல் தொல்லையுறும் நிலையில் உள்ள எங்களுக்குத் தேவையற்ற—இலக்கிய, இலக்கண வரம்பற்ற—சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் 'மைதிலி' என்ற பெயரால் வழங்கப்பெற்று வந்த இவ்விந்தி லம்பாடி மொழியை நாங்கள் கட்டாயமாகப் படித்தல் வேண்டுமென்ற ஆட்சியாளரின் கொள்கை அநியாயமானது; எனவே அதனை மாற்றி அமைக்கவேண்டும்' என்று அன்று கூறினோம். தமிழர்களுக்குத் தமிழ்தான் ஆடை; மற்ற மொழிகள் யாவும் அணிகலன்கள்; ஆடையே இல்லாத தமிழருக்கு அணி ஏன்—என்ற வினாவினை எழுப்பினோம். இங்குள்ள தமிழர் அனைவரும் எம் தாய் மொழியாம் தமிழ் மொழியை நன்கு கற்றுணர்ந்த பின்னர் வேண்டுமாயின் பிற மொழி கற்கத் தடையில்லை என்றும் அப்பொழுது ஏற்பட்ட நெருக்கடி காரணமாகக் கூறி வந்தோம்.

"ஆனால், இன்றைய நமது குறிக்கோளும்—கோரிக்கைகளும்—உரிமைக் கிளர்ச்சிகளும் வேறு தன்மைத்தனவாகும். இன்றைய ஆட்சியாளருக்கு தெளிவு பெற, இதற்குமுன் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களிலும், மாவட்ட, மாநில மாநாடுகளிலும் நமது கழக நாள்—கிழமை ஏடுகளிலும் விளக்கமாக எடுத்துக் கூறி வந்திருக்கின்றோம். அதாவது, வடக்கே விந்தியத்தையும், தெற்கே குமரியையும், மேற்கே அரபிக் கடலையும், கிழக்கே வங்காளக்குடாக் கடலையும் உள்ள எல்லைக்குட்பட்ட மக்கள் பேசும் மொழி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்றும், இந்த நான்கு மொழி பேசும் மக்களும் மிகத் தொன்மைவாய்ந்த திராவிடப் பண்பாடுடையவர்கள் என்ற வரலாற்றுப் பெருண்மையையும், அவர்கள் தனி அரசு கொண்டு தன்னிகரென வாழ்ந்த தமிழ் பெருங்குடி மரபினர் எனவும், இத்தகைய பண்பாடுடைய தென்னவர் மொழிவழி, இனவழி கலாச்சாரமுறை ஆகியவைகளில் மாறுபட்ட வட நாட்டவரோடு ஒன்றிவாழ்தல் என்பது என்றைக்குமே ஒவ்வாத நிலையென்பதையும் மிகப்பல விளக்கந் தந்து, தனிநாடு கோரி 'திராவிட நாடு பிரிவினை மாநாடு' என்ற பெயரால் சற்றேறக்குறைய பதினெட்டு ஆண்டு காலத்துக்கு முன்னரேயே மாநாடு கூட்டி, அன்றைய வெள்ளைய ஏகாதிபத்திய ஆட்சியினிடமிருந்து திராவிட நாடு பிரிவினை கோரி, அன்றையிலிருந்து இன்றுவரை கிளர்ச்சி செய்து வருவதை இன்றையக் காங்கிரசு ஆட்சியாளர்கள் நன்கறிவார்கள்.

"மேற்குறிப்பிட்ட விஷயங்களை அறிந்திருப்பதின் காரணமாகத்தான் மிகமிக அவசரப்பட்டு ஆத்திரப் புத்தியுடன், திராவிடத் தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஒன்றுபட்ட 'திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை உருவாக்கவொட்டாது தடுப்பான்வேண்டி, இந்தி மொழியை ஆட்சிமொழியாக்கும் மொழி வெறி உணர்வுடன், கட்டாயமாகப் பள்ளி மாணவர்கள் இந்தி பயிலவேண்டுமெனவும், பயின்று பட்டம் பெற்றவர்களுக்கே அரசியலாரின் அலுவலகங்களில் இடமளிக்கப்படுமெனவும் நப்பாசை காட்டியும் மிரட்டியும் வருகிறார்கள்.

"இந்த நேரத்தில் இந்திமொழி வெறியர்களுக்கும், அவர்களுக்கு அடிபணியும் நம் மாநில, இந்திய ஆட்சியின் தலைவர்களுக்கும் ஒன்று கூறவிழைகின்றேன்; எங்களின் உரிமைக் குரலை, எங்கள் கழகத்தின் முன்னணி வீரரான அருமைத்தோழர் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் டெல்லி மக்கள் சபையில் இரத்தினச் சுருக்கமாகக் கூறிய வார்த்தைகளை செவிமடுத்து, உடனடியாகத் தென்னாட்டு மக்களின் தேவைக்கும், பண்பாட்டிற்கும் ஒவ்வாத இந்தியை கட்டாய—அல்லது விருப்பப்பாடம் என்ற முறையில், வலிந்துரைத்துக் கூறி பயில வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் கொள்கையை மாற்றிக்கொண்டு, எமது நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை அமைதியான முறையில் நிறைவேற்றிக் கொடுப்பதின் மூலம் நீங்கள் உங்கள் கவுரவத்தையும், பெருந்தன்மையையும் காப்பாற்றிக் கொண்டவர்களாவீர்கள்!

"இப்பொழுது இருக்கும் சூழ்நிலை, அதாவது, மிகச் செல்வாக்கும், அதிகார அந்தஸ்தும் படைத்த பண்டித நேரு அவர்களும், அறிவும் ஆற்றலும் தெளிவும் உள்ள அண்ணா அவர்களும் இருக்கின்ற இந்தக் காலத்தில், எங்களின் கோரிக்கைகளுக்குப் பரிகாரம் கிடைக்காவிட்டால், எதிர்காலத்தில் நிலைமைகள் சுமுகமாக இரா என்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

"தனி அரசுபெற்று வாழ உறுதிகொண்டிருக்கும் நமது தேவைக்கும்—கொள்கைக்கும்—தெளிவிற்கும்—மேன்மைக்கும் முற்றிலும் மாறுபாடுடைய இந்திய சர்க்காரின் இந்தி பரப்பும் ஆதிக்கக் கொள்கையை முறியடிப்பதற்குரிய நல்லபல உருவான தீர்மானங்களை அடிகளார் திரு. அருணகிரிநாதர் அவர்கள் தலைமையில் நிறைவேற்றித் தாருங்கள் என்று கூறி, இம்மாநாட்டின் திறப்பு விழாவிற்கு என்னை அழைத்த வரவேற்புக் குழுவினருக்கும், இதுகாறும் எனது வார்த்தைகளுக்கு செவிமடுத்த பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும், தாய்மார்களுக்கும் எனது வணக்கத்தைக் கூறி இம்மாநாட்டினைத் துவக்கிவைக்கின்றேன்; வணக்கம்."

கழகக் கூட்டங்கள்

★

பளிங்காநத்தம்:
(திருச்சி)
22—9—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
பொன்-தருமன்
டாக்டர் கோவிந்தராசன்
சேப்பெருமாள்

★

அரண்மனைக்குறிச்சி:
(திருச்சி)
23—9—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
பொன்-தருமன்;
இராமசாமி
சேப்பெருமாள்
டாக்டர் கோவிந்தராசன்

சென்னை மாணவர் மன்றம்

22—9—57 மாலை 4 மணிக்கு ஆபலூர் முத்தைய முதலி தெரு எண் 34, மாணவர் மன்றக் கிளை நிலயத்தில் உறுப்பினர் பொதுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சிவகாசி தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம்

22—9—57 மாலை 5 மணிக்கு சிவகாசி ஜவுளிக் கடை பண்டு மாடியில் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது, முக்கியப் பிரச்சினைகள் பல ஆய்வுக்கு வரும்.

சேரி வாழ்வோர் மாநாடு

21—9—57 மாலை 6 மணிக்கு சென்னை—ஆயிரம்விளக்கு கதீட்ரல் சர்ச் ரோட், பிஷப் வாலர்ஸ் இரவு பாடசாலையிலும், 22-9-57 காலை 8 மணிக்கு இராயபுரம்—மீஞ்சியம்பேட்டை இராமநாய்க்கன் தெருவிலுள்ள வட சென்னை ஆதிதிராவிட மகாசன சபையிலும் மேற்படி மாநாடு நடைபெறும்.

திருத்தம்

18—9—57-ல், வெளியான 'நம் நாடு' இதழில், முதல் பக்கத்தில் வெளியாகியுள்ள சென்னை—சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்ற விடுதலை வார விழாப் பொதுக்கூட்டத்தையொட்டிய செய்தியில், 'சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் ரூ. 5 தரப்பட்டது' என்பதை, 'தமிழ் வளர்ச்சி மன்றச் சார்பில்' என்று திருத்தி வாசித்துக் கொள்வதுடன், 'தோழர் கண்ணதாசன் அவர்களிடம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் மணி விழா நிதிக்காக ரூ. 5 அதே மன்றச் சார்பில் அளிக்கப்பட்டது' என்பதையும் சேர்த்துக்கொள்ளக் கோருகிறோம். (ஆ.-ர்.)

'அமைதி நிலவ எல்லோரும் பாடுபட வேண்டும்'

சாதி பூசல்பற்றி ஐவர் அறிக்கை

சென்னை, செப். 21—

இராமநாதபுரம் பகுதியில் துவங்கிப் பரவிவரும் சாதிச் சண்டையை, வெறும் போலீஸ் பலத்தைக் கொண்டு ஒடுக்கமுடியாது என்றும், இத்தகைய சாதிச் சண்டையைத் தடுப்பதற்கு எல்லோரும் ஒன்றுகூடி ஒத்துழைக்க வேண்டுமென்றும், அதற்கான ஆக்கவேலைகளில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும், திருவாளர்கள் இராமநாதபுரம் இராசா, சா. கணேசன், பி. இராமமூர்த்தி, எம். ஆர். வெங்கட்ராமன், ம. பொ. சிவஞானம் ஆகிய ஐவரும் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளனர்.

தென்காசியில் பட்டு எடுக்கும் வேலையைச் செய்முறையில் செய்துகாட்டும் பண்ணை ஒன்றையும், 2 ஏக்கர் முசுக்கட்டைத் தோட்டத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

திராவிட நாடு விடுதலை வாரக் கூட்டங்கள்

★

சென்னை 1-வது வட்டம்:

23—9—57 இரவு 7 மணியளவில், தி. மு. கழகப் பணிமனையில் (எண் 217, திருவொற்றியூர் நெடுஞ்சாலை), தோழர் து. கோவிந்தசாமி தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

சென்னை—4வது வட்டம்

22—9—57 மாலை 5 மணிக்கு, அண்ணா படிப்பகப் பணிமனையில் (எண் 84, சோலையப்பன் தெரு, வண்ணை) விழா கொண்டாடப்படும்; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

* * *

22—9—57 காலை 9 மணிக்கு, சோலையப்பன் தெரு, எண் 88-ல் விழா கொண்டாடப்படும்; சிறார்களுக்கு இனிப்பு வழங்கி கொடியேற்றி வைக்கப்படும்.

சென்னை 11-வது வட்டம்

22—9—57 காலை 9 மணிக்கு, எண் 4/48-ஏ, பிராட்வே தெரு தி. மு. கழகப் மணிமனையில, தோழர் தெ. அன்பரசு தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்; இனிப்பு வழங்கப்படும்.

சென்னை 29-வது வட்டம்

23—9—57 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், சிந்தாதிரிப்பேட்டை-சின்னண்ண செட்டித் தெருவில், தோழர் அ. பொ. அரசு, எம். சி., அவர்கள் தலைமையில் விழா நடைபெறும்; க. அன்பழகன் எம். எல். ஏ., ஏன். சிவரத்தினம், பி. எம். கருணாகரன், எம். ஏ. கரிகாலன் பேசுவர். மாலை 4 மணிக்கு சிறுவர்களுக்குப் பால் வழங்கப்படும்.

சென்னை 35-வது வட்டம்

22—9—57 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகப் பணிமனையில் (எண் 50/3, ஆற்காட்டுச் சாலை, கோடம்பாக்கம்), தோழர் வி. பி. தரணி அவர்கள் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. குமார், இரா. அருட்சிவவர்மன், ஆதிகேசவன், கோ. கிருட்டிணமூர்த்தி பேசுவர்.

சென்னை 40-வது வட்டம்:

23—9—57 மாலை 6 மணிக்கு, சாமி படிப்பகப் பணிமனையில் (எண் 27, லாக் நகர். சேப்பாக்கம்), தோழர் கோ. தாமோதரன் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் எம். கே. மணி, அ. வை. செயராமன், இளம்பரிதி, பி.கே. கோவிந்தன், மு. பொன்னுரங்கம் பேசுவர்.

சென்னை-42-வது வட்டம்:

22—9—57 காலை 9-30 மணியளவில், தி. மு. கழகப் பணிமனையில் (எண் 4, நமச்சிவாய முதலித் தெரு) விழா, வட்டத் துணை அமைப்புகள், கிளைக் கழகச் சார்பில், தோழர் நீலநாராயணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை-46-வது வட்டம்:

22—9—57 காலை 9-மணிக்கு, தி. மு. கழகப் பணிமனையில் (எண்-1, திருவள்ளுவர் சாலை, தேனாம்பேட்டை), தோழர் தமிழ்ப்பித்தன் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் கை. பிரமையா, கே. ஆர். சம்மந்தம், வ. வில்லவன்கோதை, டேனியல் பேசுவர்.

சென்னை — சேப்பாக்கம்:

22—9—57 மாலை 3-மணியளவில், அழகிரி நினைவு மன்றப் பணிமனையில் (எண்-6, வெங்கடேச நாய்க்கன் தெரு, சேப்பாக்கம்) தோழர் அ. வெ. செயராமன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் இரா. இளம்பரிதி, எம். கே. மணி, பி. கே. கோவிந்தன், மு. பொன்னுரங்கம் பேசுவர். பகல் 12-மணியளவில் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும்.

பேராசிரியர் இருதயராஜ் படிப்பகப் பொது உறுப்பினர்களுக்கு:

23—9—57 காலை 10 மணியளவில் மேற்படி படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டம், திருச்சி, உறையூர் தோழர் செவந்திலிங்கம் கடையில் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெறும்; அதுபோது புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

திருமங்கலம் தி மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம்

23—9—57 காலை 10 மணியளவில், மேற்படி கூட்டம், தோழர் ஏ. எம். ஏ. ரகீம் அவர்களின் விடுதியில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெறும்.

சென்னை கல்விச் சங்கம்

23—9—57 மாலை 5 மணிக்கு பட்டாளம்—ஸ்டான்ஸ் ரோடு ஆண் பள்ளியில், அகநானூற்றில் குறிஞ்சித்திணைப் பற்றி ஆசிரியர் த. வெ. முருகேசனார் பேசுவார்.

சென்னை— திருவல்லிக்கேணி:

22—9—57 மாலை 5-மணியளவில், கே. எஸ். பாண்டியன் படிப்பகப் பணிமனையில் (எண் 1/2, சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி), தோழர் நீலநாராயணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் மா. பா. சாரதி, இ. மு. நெடுமாறன், மு.வரதராசன், நெல்லை—கபிலன், எல்.கோபால், பேசுவர்.

சென்னை—வண்ணை:

22—9—57 காலை 10-மணியளவில், இளங்கோ கலைமன்றப் பணிமனையில் (எண்-31, நாராயணப்ப நாய்க்கன் தோட்டம், 7-வது சந்து), தோழர் இரா. சந்திரசேகர் தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் வே. கபிலன், கோ. கு. சேகர், வே. அண்ணாமலை, கோபால், ப. மோகனவேலன் பேசுவர். சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

சென்னை-தொண்டையார்பேட்டை

22—9—57 மாலை 6 மணியளவில், குறள் அறிவு மன்றப் பணிமனையில் (எண் 16, வரதராசப் பெருமாள் கோயில் தெரு), தோழர் ச. சக்கரபாணி தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் என். சீவரத்தினம், வே. கபிலன், ந. ஐயாசாமி, ஆரல்-துரை, தேவராசன் பேசுவர். காலை 10 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும்.

உறந்தை:

23—9—57 காலை 9 மணிக்கு, திருச்சி—உறந்தை பேராசிரியர் இருதயராஜ் படிப்பகப் பணிமனையில், கொடியேற்று விழாவும் சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கப்படும்; தோழர்கள் பலர் பேசுவர். இரவு 7 மணிக்கு உறந்தை கலாமன்றத் தோழர்களால் இன்னிசையும், 'அறிவாலயம்' என்ற ஒலி நாடகமும் நடைபெறும்.

செண்பகச்சேரி:

23—9—57 மாலை 6 மணிக்கு, மாயூரம் வட்டம்-செண்பகச்சேரியில், தி. மு. கழகச் சார்பில், தோழர் து. இராமசங்கு தலைமையில் விழா நடைபெறும்; தோழர்கள் என். கிட்டப்பா, கி. சத்தியசீலன், என். சின்னதுரை பேசுவர்.

கோபிசெட்டிபாளையம்:

23-9-57 இரவு 7-மணிக்கு, கோபி-புதுப்பாளையம், காமாட்சியம்மன் கோவில் திடலில், தி.மு. கழகச் சார்பில் விழா நடைபெறும்; தோழர் பி.ஆர்.கே. சாமி, மற்றும் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.